மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், பச்சைமலைப் பகுதியில் அனைத்து 45 குக் கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது. அதில் 19 குக்கிராமங்கள் வழக்கமான முறையில் மின்வசதி செய்யப்பட்டுள்ளது. 26 குக்கிராமங்களுக்கு சூரிய ஒளிமூலம் மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது.

281–

வேதாரண்யம் உப்பளப் பகுதிகளில் நிலவரி வசூல் செய்தல்

***10499–திரு. பி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) வேதாரண்யம் பகுதியிலுள்ள உப்பளங்களில் தமிழக அரசுக்குச் சொந்தமான இடங்களில் எத்தனை ஆண்டுகள் நிலவரி வசூல் செய்யப்படவில்லை?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்புத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலுள்ளதால் வேதாரண்யம் வட்டத்திலுள்ள உப்பளங்களில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான இடங்களில் 1984-ம் ஆண்டு முதல் நிலவரி வசூலிக்கப்படவில்லை.

(ஆ) குத்தகைத் தொகை ரூ. 34,37, 243/- (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து இருநூற்று நாற்பத்து மூன்று மட்டும்) பாக்கி உள்ளது.

291–

சேலம் மாவட்டம், தலைவாசலில் அரசு விதைப் பண்ணை அமைத்தல்.

***25696-திரு. கே. கந்தசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் மாவட்டம், தலைவாசலில் அரசு விதைப் பண்ணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) ஏற்கனவே இரண்டு அரசு விதைப்பண்ணைகள் சேலம் மாவட்டத்தில் இயங்கி வருவதால், மேலும் அரசு விதைப் பண்ணை அமைக்க அரசு முன்வராது.

(ஆ) வினா எழவில்லை.

297–

வலங்கைமான் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைத்தல்.

*21249-- **திருமதி கே. பஞ்சவர்ணம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வலங்கைமான் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

298–

விழுப்புரம் வட்டத்தில் மயானப் பாதை ஆக்கிரமிப்பை அகற்றுதல்.

*21237--**திரு. வீ. சுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விழுப்புரம் வட்டம், சின்ன அம்மனங்குப்பம் ஆதிதிராவிடர் காலனிக்கு மயானப் பாதை புதிதாக எடுக்கப்பட்டும், தனி நபர் ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அகற்றப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம், விழுப்புரம் வட்டம், சின்ன அம்மனங்குப்பம் ஆதிதிராவிடர் காலனிக்கான மயானப் பாதையில் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்திருந்தது, தற்போது அகற்றப்பட்டுவிட்டது.